19.07.2024

<u>கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமா்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துரை | | |
| த/பெ | ராஜாங்கம் | | |
| கிராமம் | சித்தேரிக்கரை | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 38/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறாா்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** இரயில்வே கேன்டீனில் வேலை செய்து வருகிறேன். எனக்கு சுரேஷ் ஐ தெரியும். நான் ஒரு சிப்ட் பார்த்தால் அவர் ஒரு சிப்ட் பார்ப்பார். அ.சா.19 சரோஜா என் மனைவி ஆவார். சுரேஷ் ம் நானும் ஒரே கேன்டீனில் வேலை செய்கிறோம். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் என் கேன்டீனில் வேலை செய்யும் சுரேஷ் என்பவர் கணக்கு புத்தகத்தை எடுத்து கொண்டு சென்று விட்டார் என்று நான் சென்று இரயில்வே 1வது பிளாட்பாரத்தில் தின்பண்டங்கள் விற்றுக் கொண்டிருந்தவரை கேட்டபோது வாய் தகராறு ஆகி நான் சுரேஷை அடித்து விட்டேன். அது சம்மந்தமாக அவர் விழுப்புரம் இரயில்வே காவல் நிலையத்தில் புகார் தெரிவித்ததால் அந்த காவல் நிலையத்தை சேர்ந்த போலீசார் வந்து அடித்து என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். அழைத்து சென்ற காவலரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அவர்களை நான் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் வேறுயாரையும் நான் பார்க்கவில்லை. அதன் பிறகு என் நண்பர் ரவியும் என் குடும்பத்தாரும் வந்து காவல் நிலையத்தில் இருந்தவர்களிடம் பேசி எழுதி கொடுத்து விட்டு என்னை அழைத்து சென்று விட்டார்கள். நான் சுரேஷை அடிக்க சுரேஷ்ம் என்னை அடித்தார். இது தொடர்பாக நான் முண்டியம்பாக்கம்

மருத்துவமனைக்கு சென்று மருந்து போட்டுவிட்டு வந்தேன். அதன் பிறகு விழுப்புரம் நீதித்துறை நடுவர் அவர்கள் காவல் நிலையத்திற்கே வந்து விசாரித்தார்கள். என்னை விசாரணைக்கு வர சொன்னார்கள். நானும் என் மனைவியும் விசாரணைக்கு சென்றோம். நான் நீதித்துறை நடுவர் விசாரணையில் தற்போது சொன்னதுபோலதான் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் நீதித்துறை நடுவர் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். அந்த கையெழுத்து (எண்ணிக்கை 5). அந்த கையெழுத்துக்கள் அ.சா.ஆ.8 ஆகும். என்னிடம் காட்டப்படும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் நீண்ட நாட்கள் ஆனதால் எது என்று என்னால் கூற இயலவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

வேலூர் குற்றப்புலனாய்வு துறை ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், நான் அவர்களது விசாரணையில் கடந்த 2004 முதல் 10 வருடங்களாக விழுப்புரம் இரயில்வே ஸ்டேசனில் சிட்டிபாபு சன்ஸ் கேன்டீனில் இருந்து தின்பண்டங்கள் எடுத்து வந்து தள்ளுவண்டியில் வைத்து விற்று வந்தேன் என்றும், அந்த கடையில் பல நபர்கள் வேலை செய்கிறார்கள் என்றும், அதில் சுரேஷ் என்பவரும் வேலை செய்கிறார் என்றும், கடைசியாக 05.05.2014ம் தேதி காலை வேலைக்கு சென்று இரவு 2 மணி வரை (06.05.2014 அதிகாலை) பணி செய்து விட்டு வரவு செலவு கணக்கை நோட்டு புத்தகத்தில் எழுதி விட்டு அந்த நோட்டை தள்ளுவண்டியில் வைத்துவிட்டு வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும், 6.10.2014ம் தேதி காலை 10 மணிக்கு அந்த நோட்டு புத்தகத்தை வந்து பார்த்தேன் என்றும், அந்த தள்ளுவண்டியை

சுரேஷ் என்பவர் எடுத்து சென்று விட்டார் என்றும், அது சம்மந்தமாக சுரேஷிடம் கேட்க எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டு நான் சுரேஷை அடித்து விட்டேன் என்றும், பிறகு சுரேஷ் இரயில்வே போலீசுக்கு தகவல் கொடுக்க அப்போது திருக்குமரன் என்ற போலீசார் அன்று மதியம் 12 மணியளவில் சாதாரண உடையில் வந்து என்னை கன்னத்திலும், விலாவிலும் அடித்து என்னை காவல் நிலையம் இழுத்து சென்றார் என்றால் சரியல்ல.

என்னை அடித்து இழுத்து சென்றதை அங்கு நிறைய நபர்கள் பார்த்தார்கள் என்றும், காவல்நிலையத்திற்கு என்னை அழைத்து சென்று ஆயுத அறையில் Leadingchain **போட்டு வைத்தார்கள் என்றும், மறுமுனையில் ஓடும் இரயிலில் புத்தகம் விற்கும் ஜெயவேல் என்பவரை காலில் அவ்வாறு** Leadingchain **போட்டு உட்கார வைத்திருந்தார்கள் என்றும், அப்போது பாராவில் ஒரு பெண் காவலர் இருந்தார் என்றும், திருக்குமரன் என்னை பார்த்து ஜெயவேலை காட்டி பழக்கமா என்று கேட்டார்கள் என்றும், நான் அவர் ஓரளவிற்கு தெரியும் என்றும், அவர் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும், அவர் இரயில்வேயில் வேலை செய்த பாஸ்கரன் என்பவருக்கு மிகவும் நெருக்கமானவர் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல.**

**திருக்குமரன்** 3 **அடி நீளமுள்ள ஒரு பிளாஸ்டிக் ஓஸ் பைப்பால் என்னையும் ஜெயவேல் என்பவரையும் உடலில் பல இடங்களில் பலமுறை ஓங்கி அடித்தார் என்றும், ஜெயவேல் அலரி கத்திக்கொண்டிருந்தார் என்றும் அவருக்கு வியர்த்து கொட்டியது என்றும், திருக்குமரன் காவல் நிலையத்தில் வேலை செய்யும் காசி என்பவரை அழைத்து இரத்தக்கட்டு ஏற்படாமல் இருக்க ஒரு மருந்து வாங்கி**

வரச்சொல்லி அதை தடவிக் கொள்ள சொன்னார் என்றும் சொன்னால் சரியல்ல.

அப்போது என்னுடைய நண்பர் ரவி என்பவர் காவல்நிலையம் வந்தார் என்றும், என்னை அழைத்து செல்ல எஸ்எஸ் ஐ ஒருவரிடம் கேட்டார் என்றும், அவர் புகார் சொன்ன சுரேஷை புகாரை வாபஸ் பெற்று அழைத்து செல்ல சொன்னார் என்றும், அதற்கு காவல் நிலையத்தில் தற்போது ஆய்வாளர் இல்லை என்றும், திருச்சியில் இ்ருந்து திரும்பி வந்தவுடன் அனுப்பி விடுகிறேன் என்று சொன்னதால் ரவி எனக்கும் ஜெயவேல் என்பவருக்கும் தக்காளி சாதம் வாங்கி கொடுத்து சென்று விட்டார் என்றும், அன்று 06.05.2014 அன்று மாலை 6 மணியளவில் குருவாயூர் எக்ஸ்பிரஸ் இரயிலில் ஆய்வாளர், எழுத்தர் புருசோத்தமன் ஆகியோர் காவல் நிலையம் வந்தார்கள் என்றும், அப்போது காவல் நிலையத்தில் பாரா காவலர், லோகேஷ்குமார், ஓட்டுநர் திருக்குமரன் ஆகியோர் இருந்தார்கள் என்றும், ஆய்வாளர் வந்தவுடன் ஜெயவேல் ஏதாவது சொன்னானா என்று கேட்டுக்கொண்டே வந்தார் என்றும், திருக்குமரனும் ஆய்வாளரும் ஆளுக்கொரு பிளாஸ்டிக் பைப்பை கையில் வைத்துக்கொண்டு டேய் பர்ஸ், பணம், செல்போன் எங்கே திருடியது என்று ஒத்துக்கொள் என்று சொல்லி அடித்தார்கள் என்றும், லோகேஷ்குமார் ஜெயவேலை பார்த்து உண்மையை ஒத்துக்கோடா எதற்கு அடிவாங்கி சாகப்போகிறாய் என்று சொன்னார் என்று சொன்னேன் என்றால் சரியல்ல.

அன்று இரவு 8.30 மணியளவில் என் நண்பர் ரவி என் சித்தப்பா மூர்த்தியுடன் காவல் நிலையம் வந்து ராஜன் எஸ்எஸ்ஜ என்பவரிடம் என்னை அனுகுமாறு கேட்டார் என்றும், அதற்கு அவர் மறுநாள் அனுப்புவதாக கூறினார் என்றும்,

அப்போது ரவி எனக்கு ஒரு தோசை வாங்கி கொடுத்தார் என்றும், காவல் நிலையத்தில் வேலை செய்யும் காசி ஜெயவேலுக்கு ஒரு தோசை வாங்கி கொடுத்தார் என்றும் அவரால் தோசையை சாப்பிட முடியவில்லை, அந்த இடத்திலேயே படுத்து கொண்டார் என்றும், எனக்கு தூக்கம் வரவில்லை என்றும், இரவு சுமார் 12 மணியளவில் திருக்குமரன் அதேபோல் ஒரு ஓஸ் பைப்பை எடுத்துக்கொண்டு வந்து பாதம் மற்றும் தலையில் ஓங்கி ்அடித்தார் என்றும் அடி தாங்க முடியாமல் சத்தம் போட்டு ஜெயவேல் அழுதார் என்றும், அப்போது பாராவில் இருந்த பாரதிதாசன் என்ற போலீசும் லோகேஷ்குமார் என்ற போலீசும் அவ்வாறு அடிக்காதே என்று திருக்குமரனை பார்த்து சத்தம் போடவே திருக்குமரன் போய் படுத்துக்கொண்டார் என்றும், ஜெயவேல் தூங்கிவிட்டான் நானும் தூங்கிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுநாள் 07.05.2014 விடியற்காலை 6 மணியளவில் பாலமுருகன் ஏட்டய்யா வந்தார் என்றும், அப்போது திருக்குமரனும் வந்தார் என்றும், பாலமுருகன் ஓஸ் பைப்பாலும், Shoe வாலும் ஜெயவேலை தாக்கினார் என்றும், அப்போதே ஜெயவேல் என்பவருக்கு வியர்வை கொட்டி ஈரமாகி வியர்வை நிற்கவில்லை என்றும், கைலியை கூட அவரால் கட்டமுடியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

அன்று காலை 8 மணியளவில் ஒரு பெண் காவலர் பணிக்கு வந்தார் என்றும் அதனை பார்த்த திருக்குமரன் டேய் கைலியை தூக்கி கட்டுடா என்று ஜெயவேலுவை மிரட்டினார் என்றும், அந்த கைலியை எடுத்து உடம்பின் மீது மூடிக் கொண்டான் என்றும், அதை பார்த்த பெண் காவலர் காவல் நிலையத்தின் பின் பக்கம் சென்று விட்டார் என்றும், அப்போது அங்கு வந்த ஆய்வாளர் என்னடா

இப்படி செஞ்சிட்டீங்களே என்று கேட்டுக்கொண்டு உள்ளே வந்து ஜெயவேலுலை பேனுக்கு கீழே படுக்க வைத்தார் என்றும், செயினை கழற்றி விட்டு ரூமில் அமர வைத்தார் என்றும், அவரிடம் இருந்து எந்த சத்தமும் எனக்கு கேட்கவில்லை என்றும், ஆய்வாளரும் மற்ற போலீசாரும் பதற்றத்துடன் இருந்தார்கள் என்றும், அவர்கள் ஏதோ குசு குசு என மெதுவாக பேசினார்கள் என்றும், ஆய்வாளர் என்னை பின்பக்கம் போய் நாற்காலியில் உட்கார சொன்னார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

அதன் பிறகு எனக்கு நேரம் சரியாக தெரியவில்லை. ஆனால் 10 முதல் 10.30 இருக்கும் என்று நினைக்கிறேன் என்றும் , திருக்குமரன் பின்பக்கம் இ்ருந்த காவல் நிலைய டாட்டா சுமோவை அதிவேகமாக ஓட்டிச்சென்று காவல் நிலையத்தின் முன்பக்கமாக கொண்டு சென்று நிறுத்தினார் என்றும், அப்போது எழுத்தர் புருசோத்தமன், எஸ் பி ஏட்டு ரவி என்ன இது அநியாயமாக இருக்கிறது ஏதாவது சிக்கல் என்றால் நாம் எல்லோருக்கும் சிக்கலாகி விடும் என்று பேசி கொண்டார்கள் என்றும், அப்போது எழுத்தர் புருசோத்தமன் காவல் நிலையத்தை சுத்தம் செய்யும் காசி என்பவரை கூப்பிட்டு ஜெயவேலுவை கட்டி வைத்திருந்த இடத்தை கழுவி விட சொன்னார் என்றும் சொன்னால் சரியல்ல.

அப்போது என்னை கூட்டி போக வந்த என் அம்மா, மனைவி சரோஜா ஆகியோரிடம் அங்கிருந்த ராஜுவ் காந்தி என்ற போலீஸ்காரர் எங்களிடம் எழுதி வாங்கி கொண்டு நாளை 12 மணிக்கு வந்து அபராதம் கட்டச்சொல்லி சொன்னார் என்றும் சொன்னால் சரியல்ல. அப்போது காவல் நிலையத்தின் முன்பக்கம் இருந்த டாட்டா சுமோவில் ஒரு ஆளை தூக்கி கொண்டு போய் ஏற்றி கொண்டு

போனார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு என் மனைவி வீட்டிற்கு அழைத்து சென்று ஒத்தடம் கொடுத்தார்கள் என்றும், அது சரியாகவில்லை என்றும் மறுநாள் 08.05.2014 அன்று விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று ஊசி போட்டுக்கொண்டு சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், அப்போது அங்கு வந்த இரயில்வே காவல்நிலைய போலீசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார் என்றும் சொன்னால் சரியல்ல.

மேலும் ஜெயவேலுவை 2 நாள் இரயில்வே காவல்நிலையத்தில் வைத்து அடித்ததால் தான் இறந்துள்ளான் என்றும், அவனை ஏற்கனவே ஒரு முறை கோலியனூர் கரும்பு தோட்டத்தில் கொண்டு சென்று அடித்ததாகவும், அது சம்மந்தமாக ஜெயவேலுவின் நண்பர் இரயில்வேயில் வேலை செய்து ஓய்வு பெற்ற பாஸ்கர் என்பவர் மேல் அதிகாரிகளுக்கு அது சம்மந்தமாக புகார் அனுப்பியுள்ளார் என்றும், அந்த புகாரினால் ஆத்திரம் கொண்டு 06.05.2014 மற்றும் 07.05.2014 ஆகிய 2 நாட்கள் திருட்டு வழக்கில் காவல்நிலையத்தில் வைத்து திருக்குமரன், பாலமுருகன் மற்றும் ஆய்வாளர் அடித்து சித்திரவதை செய்து, படுத்தி எடுத்ததில் வலிதாங்காமல் இறந்துள்ளான் என்றும் சொன்னால் சரியல்ல.

இதுதொடர்பாக என்னையும் என் மனைவி சரோஜாவையும் 10.05.2014 ம் தேதி விழுப்புரம் நீதித்துறை நடுவர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. மேலும் அவர் விசாரித்தபோது நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தது சம்மந்தமாக டிஸ்சார்ஜ் நகலை கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

இது சம்மந்தமாக விழுப்புரம் சிபிசிஐடி ஆய்வாளர் அவர்களும் மற்றும் வேலூர்

சிபிசிஐடி ஆய்வாளர் அவர்களும் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முதன்மை விசாரணையில் சொன்னதை தான் நீதித்துறை நடுவரிடமும் சொல்லியுள்ளேன்.

**2,3,4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**

இல்லை